

தமிழ்நாடு சலவை தொ.மு.ச. சார்பில் சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் கிழக்கு பகுதியில் நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு நெல்லை எம்.எம்.சாமி ஏற்பாட்டில் ஏழு நபர்களுக்கு இஸ்திரிபெட்டிகள், நூற்றுக்கணக்கான கழக தொழிலாளர்களுக்கு எவர்சில்வர் பாத்திரம், மற்றும் 50 இளைஞர்களுக்கு சட்டைகள் ஆகியவற்றை வட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ, ஆகியோர் வழங்கினர்.உடன் இரா.லட்சுமணன், எம்.வேதலட்சுமி,வெ.சு.சத்தியநாராயணன், சி.மணிகண்டன், எஸ்.எம்.பரசுராமன், இர.பொன்இளவரசன், கட்பீஸ் ப.சோமசுந்தரமூர்த்தி,தா.வ.மு.கஜேந்திரன், என்.எம்.கதிரேசன், நா.கோதண்டன், மா.நாகராஜ், ப.குமார், ச.தமிழ்செல்வன், பொ.து.ராஜா, ஜெ.பிரேம்ஆனந்த், வி.முத்து, ஜெ.சுரேஷ்பாபு, பி.அன்பழகன், டி.ஆர்.தணிகாசலம், தேவிகதிரேசன் எம்.சி, குமாரி நாகராஜ் எம்.சி, ப.அ.சண்முகம், எஸ்.கே.இளங்கோ, டி.லெனின், டி.கணேசன் மற்றும் பலர் பங்கேற்றனர்.

### கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# அன்னம் தரும் அமுதகரம் 115வது நாள்!

## துறைமுகம் கிழக்குப் பகுதியில் அமைச்சர் பி.கே. சேகர்பாபு உணவு வழங்கினார்!

சென்னை, ஜுன் 15-

சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு, வெவ்வேறு இடங்களில் அன்னம் தரும் அமுதகரங்கள் சிறப்புமிகு திட்டத்தின் 115வது நாள் துறைமுகம் தொகுதி - இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்.





தமிழ்நாடு முதலமைச் சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட்டத்தின் 115 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (14.6.2026) துறைமுகம் தொகுதி: 1) துறைமுகம் கிழக்கு பகுதி வட்டம் 56 சண்முகராயன் தெரு தையப்பன் தெரு சந்திப்பு. 2) துறைமுகம் மேற்கு பகுதி வட்டம் 54 ஆ அம்மன் கோயில் தெரு, கிருஷ்ணப்பா, குளத் தெரு (ஆட்டோஸ்டேண்டு) அருகில், சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு "தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தர மாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக் காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!" என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் பெருநகர சென்னை மேயர் பிரியா ராஜன், எஸ்.முரளி, எஸ். இராஜசேகர், இசட்.ஆசாத், பி.ஸ்ரீராமுலு, ஜி.எம். தேவன், எம்.விஜயகுமார், என்.பி.எம்.ஷேக்அப்துல்லா, இப்ராஹிம்கனி, ஆர்.கலைச்செல்வி, பி.விஜயகுமார், எல்.சம்பத்குமார், பா.பிரதாப்குமார், எம்.விநாயகம், ப.ஜெகதீஷ் துறைமுகம் கிழக்கு / மேற்கு வட்ட கழக செயலாளர்கள்: எல்.சத்திய நாராயணன், எஸ்.புகழேந்தி, ஆர்.எ.அஸ்லாம், டி.கதிரவன் (எ) ராஜா, எம்.பரத்குமார், கே.கவியரசு, ஆ.நா.பார்த்திபன், எம்.ஜெய்சங்கர், பா. கதிரவன், ஆர்.இரவிச்சந்திரன், ஜி.ராம மூர்த்தி, பா. அண்ணா துரை, டி.சதிஷ்குமார், வே.பா.பிரபாகரன், லண்டன் முருகன். ஒருங்கிணைப்பாளர்கள்: சொ. வேலு, எஸ்.முரளி, பெரம்பூர் ஆர்.ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடி கள் கலந்து கொண்டனர்.

### வட்டச் செயலாளர் க.பாபு தலைமையில் பெரம்பூர் தெற்கு

# 36 (அ) வட்ட பாக முகவர்கள் - பூத் கமிட்டி உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ - கன்னிகை ஜி.ஸ்டாலின் ஆலோசனை வழங்கினர்!

சென்னை, ஜுன். 15-

சென்னை வடக்கு மாவட்டம், பெரம்பூர் தெற்குப் பகுதி, 36 (அ) வட்ட தி.மு.க. சார்பில் வட்டக் கழகச் செயலாளர் க.பாபு தலைமையில் நடைபெற்ற பாக முகவர்கள் (BLA 2) மற்றும் பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC) ஆலோசனைக் கூட்டம் மற்றும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாளை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா (13.06.2025 - வெள்ளிக்கிழமை) அன்று 14 வது மேற்கு குறுக்கு தெரு, எம்.கே.பி.நகர், மாலதி மஹாலில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பெரம்பூர் சட்டமன்ற உறுப்பினரும், மாவட்டக் கழகப் பொறுப்பாளருமான ஆர்.டி.சேகர், தொகுதி பார்வையாளர் கன்னிகை ஜி.ஸ்டாலின் ஆகியோர் கலந்து கொண்டு ஆலோசனை வழங்கி நலத்திட்ட உதவிகளை வழங்கினர்.

இதில் பெரம்பூர் தெற்குப் பகுதிக் கழகச் செயலாளர் க.ஜெயராமன், மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் இரா.நரேந்திரன், மாமன்ற உறுப்பினர் எ.ஆர். ஆர்.மலைச்சாமி, மாவட்ட துணைச் செயலாளர் எஸ். ஆர்.கமலக்கண்ணன், தயாளன், எஸ்.சாக்ரடீஸ், வேதா, வி.எஸ்.பிரபு, சச்சிதானந்தன், புல்லட் செபஸ்டின், கூல் பாயிண்ட் சி.பிரகாஷ், எம். ஆர்.டி.அப்துல் ரகுமான், டி.வளன் ராஜ், நா.நடராஜ், சதீஷ், சேதுராமன் , பொன்னரசன், க.அரி மூர்த்தி, கே.எம். குழந்தைசாமி, ஏ.என்.சரவணன், எம்.மதிவாணன், கே.ஜி.சீனிவாசன், எம்.எஸ். முருகன், துரை பாஸ்கர், முரளி மற்றும் மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள் மற்றும் பாக முகவர்கள் (BLA2), பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC) கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாட்டிற்கென்று வெறும் திட்டங்கள் மட்டும் அறிவிப்பு!

# வெறும் வாய்ச்சொல் ஜாலங்கள் செய்வதுதான் ஒன்றிய அரசின் வேலை!

## 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் கண்டனம்!

**சென்னை, ஜுன் 15 -**

**ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாட்டிற்கென்று வெறும் திட்டங்களை மட்டும் அறிவித்துவிட்டு அதை நிறைவேற்றுவதற்கான நிதி ஒதுக்கீடு செய்யாமல் வெறும் வாய்ச்சொல் ஜாலங்கள் செய்வது தான் ஒன்றிய அரசின் வேலையாக உள்ளது என 'தினகரன்' நாளேடு தலையங்கம் வெளியிட்டுள்ளது.**



தினகரன்

ஜுன் 14, 2025 சனிக்கிழமை

வாய்ச்சொல் ஜாலங்கள்

அது வருமாறு:-

திட்டங்களை நிறைவேற்ற தேவையான வருவாயை பெருக்குவதற்கான அதிகாரங்கள் மாநில அரசுகளிடம் குறைவாகவே உள்ளன. மாநிலங்களுக்கு பகிர்ந்தளிக்ககூடிய வரி வருவாய் பங்கினை ஒன்றிய அரசு குறைத்து வழங்குவதால் மாநில அரசுகளால் மக்களுக்கான திட்டங்களை நிறைவேற்றுவதில் சிரமங்கள் இருந்து வருகிறது. பொதுவாக ஒரு கூட்டாட்சி அரசு என்றால், வளங்களை பங்கிட்டுக் கொள்வது என்பதுதான் அடிப்படை அம்சமாகும். அந்த பங்கீடு அனைத்து மாநிலங்களுக்கும் சமமாக இருக்க வேண்டும். ஆனால் ஒன்றிய அரசு அவ்வாறு சமமாக பங்கிட்டு வழங்குவதில்லை.

பாஜ ஆளும் மாநிலங்களுக்கும், ஒன்றிய அரசின் அனைத்து நடவடிக்கைகளுக்கும் கண்ணைமூடிக்கொண்டு ஆதரவு தெரிவிக்கும் கூட்டணி கட்சிகள் ஆளும் மாநிலங்களுக்கும் கூடுதல் நிதியையும், எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களுக்கு குறைவான நிதியையும் வழங்கி வருகிறது. தமிழ்நாடு போன்ற மாநிலங்களை முற்றிலும் வஞ்சிப்பது என்பது ஒன்றிய அரசின் எழுதப்படாத விதியாக உள்ளது. தமிழ்நாடு அரசின் திட்டங்களுக்கு ஒன்றிய அரசு போதுமான நிதி ஒதுக்குவதில்லை என்ற பிரச்னையைவிட தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் ஒன்றிய அரசின் நேரடி திட்டங்களுக்குகூட நிதி ஒதுக்கீடு செய்வது இல்லை என்பது தான் இங்கே பிரச்னையே.

ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாட்டிற்கு என்று வெறும் திட்டங்களை மட்டும் அறிவித்துவிட்டு அதை நிறைவேற்றுவதற்கான நிதி ஒதுக்கீடு செய்யாமல் ஏதோ ஒன்றிய அரசின் மொத்த வருவாயையும் தமிழ்நாட்டிற்கே வாரி வழங்குவதுபோல வெறும் வாய்ச்சொல் ஜாலங்கள் செய்வது தான் ஒன்றிய அரசின் வேலையாக இருந்து வருகிறது. இதற்கு சிறந்த உதாரணம் சொல்ல வேண்டுமெனில், மதுரை எய்ம்ஸ் மருத்துவக்கல்லூரி திட்டம். ஒன்றிய அரசால் இத்திட்டம் அறிவிக்கப்பட்டு 10 ஆண்டுகள் ஆகிவிட்டது.

ஆனால் ஒற்றை செங்கல் கூட அங்கு கிடையாது. இதைத்தான் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சேலத்தில் நடந்த அரசு விழாவில் பேசுகையில், "மதுரையில் 10 ஆண்டாக பணி நடப்பது எய்ம்சா அல்லது விண்வெளி நிலையமா?" என்று கேள்வி எழுப்பி உள்ளார். இதுபோல சென்னை மெட்ரோ ரயில் புதிய ரயில்வே திட்டம், குடிநீர் திட்டம், வீடு கட்டும் திட்டம், பெஞ்சல் புயல், மிக்ஜாம் புயல் நிவாரணம் என பலவற்றுக்கு ஒன்றிய அரசு நிதி ஒதுக்குவதில்லை.

அதிலும் குறிப்பாக பேரிடர் நிதி ஒதுக்கீட்டில் தொடர்ந்து தமிழ்நாடு புறக்கணிக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டுக்கு ஒன்றிய அரசு வழக்கமாக கொடுக்க வேண்டிய நிதியைகூட கொடுப்பதில்லை என்பது குற்றச்சாட்டாக உள்ளது. தேசியக் கல்விக் கொள்கையின்படி மும்மொழிக் கொள்கையை ஏற்றால்தான் தமிழ்நாடு பள்ளி கல்விக்கான நிதி ஒதுக்கப்படும் என ஒன்றிய அமைச்சர் தர்மேந்திர பிரதான் பகிரங்கமாகவே அறிவிக்கிறார். நாட்டின் பொதுச் செலவினத்தில் 62.4 சதவீதம் மாநிலங்களுக்கானது. ஆனால் மொத்த வருவாயில் 37.3 சதவீதம் மட்டுமே தற்போது கிடைக்கிறது.

63 சதவீத நிதியை ஒன்றிய அரசே வைத்துக் கொள்கிறது. குறிப்பாக மத்திய வருவாயில் 41 சதவீதத்தை மாநிலங்களுக்கு ஒதுக்க வேண்டும் என்ற 15வது நிதிக் குழுவின் பரிந்துரை முழுமையாக செயல்படுத்தப்படாமல் உள்ளது. இதனால் தமிழ்நாடு உள்ளிட்ட பல்வேறு மாநிலங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு போன்ற மாநிலங்களில் ஒன்றிய பாஜ அரசு தனது கொள்கைகளை நிலைநாட்ட சிந்தாந்த ரீதியாக வும், கலாச்சார ரீதியாகவும் தாக்குவதற்கு வசதியாக பொருளாதார உத்தியை கையாண்டுவருகிறதோ என்ற சந்தேகம் வலுவாக எழுகிறது.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட் டுள்ளது.

### புதிய அறிவிப்புகளைச் செயல்படுத்தும் வகையில்

# சி.எம்.டி.ஏ. சார்பில் - துறை சார்ந்த அலுவலர்கள் கலந்தாய்வுக் கூட்டம்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில் நடைபெற்றது!

சென்னை, ஜுன்.15-

அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில் சி.எம்.டி.ஏ. சார்பில் அறிவிக்கப்பட்ட புதிய அறிவிப்புகளை செயல்படுத்தும் வகையில் துறை சார்ந்த அலுவலர்கள், கட்டிடக் கலைஞர்கள் (Architects) மற்றும் ஆலோசகர்களுடன் கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது.

முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி நேற்று (14.6.2025) சென்னை, எழும்பூர், தாளமுத்து நடராஜன் மாளிகையில் உள்ள சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும அலுவலகக் கூட்டரங்கில் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு தலைமையில் 20252026ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிவிக்கப்பட்ட புதிய அறிவிப்புகளைச் செயல்படுத்தும் வகையில் துறை சார்ந்த அலுவலர்கள், கட்டிடக் கலைஞர்கள் (Architects) மற்றும் ஆலோசகர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும முதன்மைச் செயல் அலுவலர் அ.சிவஞானம், மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையாளர் கே.ஜே.பிரவீன் குமார், வடக்கு வட்டார துணை ஆணையாளர் கட்டா ரவி தேஜா, சி.எம்.டி.ஏ. தலைமைத் திட்ட அமைப்பாளர்கள் பாலசுப்பிரமணியன், ரவிக்குமார் தலைமைப் பொறியாளர் மகாவிஷ்ணு, கண்காணிப்பு பொறியாளர்கள் ராஜமகேஷ்குமார், பாலமுருகன், தலைமை நிர்வாக அலுவலர் திருமதி.மு. இந்துமதி மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.



# தி.மு.க. இளைஞர் அணி

## இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

## ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

தூத்துக்குடி வடக்கு, திண்டுக்கல் மேற்கு, கிருஷ்ணகிரி கிழக்கு மற்றும் கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டங்களில் நியமிக்கப்பட்டுள்ள இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற உள்ளது. புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல், இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 15.06.2025 ஞாயிற்றுக்கிழமை | காலை 9.30 மணி | தூத்துக்குடி வடக்கு | கலைஞர் அரங்கம், எட்டையாபுரம் சாலை, தூத்துக்குடி. |
| | மாலை 4.00 மணி | திண்டுக்கல் மேற்கு | அபூர்வா ஹால், ஒட்டன்சத்திரம். |
| | மாலை 3.00 மணி | கிருஷ்ணகிரி கிழக்கு | சுபம் ஹால், ஸ்ரீ வெங்கடேஸ்வரா காம்ப்ளக்ஸ், பெங்களூரு பிரதான சாலை, கிருஷ்ணகிரி. |
| 16.06.2025 திங்கள்கிழமை | காலை 10.00 மணி | கிருஷ்ணகிரி மேற்கு | ஆனந்த் கிராண்ட் பேலஸ், சிஷ்யா பள்ளி அருகில், தளி சாலை, ஓசூர். |

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 13-06-2025

கலைஞர் 100 1924 - 2023

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி


ஆறாம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம் 10.09.1937

மறைவு 14.06.2019



செம்மண்ணின் பகுத்தறிவு சுடரே!

பெரியவர் எஸ்.சிவசுப்ரமணியன் M.A.,B.L., அவர்கள்

முன்னாள் பெரம்பலூர் மாவட்ட கழக செயலாளர்
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்

உங்கள் நினைவுகளுடன்

ஆர்.கலியபெருமாள் B.E.,
ஒன்றிய கழக பொறுப்பாளர் - ஆண்டிமடம் (தெற்கு)
அரியலூர் மாவட்டம்